# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்டபீடம்

## சட்டமாணிப் பரீட்சை – ஆண்டு IV - 2023

## வரிச்சட்டம்

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 07

எவையேனும் **நான்கு** வினாக்களுக்கு **மட்டும்** விடை தருக.

**(தெளிவற்ற கையெழுத்திற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்)**

---

1. 'Adam Smith இன் நல்ல வரிவிதிப்புக்கான கொள்கைகள் (principles of good taxation) இன்று வரிவிதிப்புக்கு நல்லதொரு அடிப்படையாக அமைகின்றனவாயினும் அவை எப்போதும் பின்பற்றப்படுவதில்லை.' இக் கொள்கைகளை ஆதாரமாகக் கொண்டு, அரச அதிகாரிகள் எவ்வாறு பொதுப் பணத்தைப் பெற்றுச் செலவிட வேண்டும் என்பதனைப் பற்றி கருத்தொன்றை எழுதுக.

**(25 புள்ளிகள்)**

2. கொழும்பைச் சேர்ந்த கவின் என்பவன் யூரியா உரத்தை இறக்குமதி செய்து விநியோகிக்கும் தொழிலில் ஈடுபட்டு வரும் வர்த்தகனொருவனாவான். தொழில் நிமித்தமாக அடிக்கடி பிற மாவட்டங்களுக்குப் பயணிப்பான். 2010 இல் கொழும்பில் வீடொன்றினை நிர்மானிக்க அவன் ஆரம்பித்தான். அவன் ரூ. 20,000,000/- இனை நிலத்தை வாங்குவதற்கும் மற்றும் ரூ. 10,000,000/- இனை வீடு கட்டுவதற்கும் செலவிட்டான். 2011 இல் வீடு கட்டுமானப் பணிகள் நிறைவுற்றது. 2012 இல் டைல்ஸ் பதிக்கவென ரூ. 2,000,000/- இனை செலவிட்டான். 2013 இல் டைல்ஸ் மேலெழும்பி வரத் தொடங்கியதன் காரணமாக, கவின் ரூ. 1,000,000/- இனை திருத்தியமைப்பதற்காக செலவிட்டான். வீடு மற்றும் நிலம் இரண்டிற்கும் உரிமை கோரி ஊடுருவிய நபரை வெளியேற்றுவதற்காக கவின் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கலொன்றினை 2014-2018 இற்கு இடையில் தொடுத்தான். அவன் ரூ. 3,000,000/- இனை இவ் வழக்கிற்கு செலவிட்டான். இயற்கை உரத்திற்கு மாறுவதற்கான அரசாங்கத்தின் கொள்கைக்கு அமைவாக, கவின் இரத்தினபுரியில் உள்ள தனது தோட்டத்திற்கு அருகில் பெரியளவிலானதொரு இயற்கை உரப் பண்ணையைத் தொடங்கும் நோக்கத்துடன் இடம்பெயர முடிவு செய்தான். இத்தனை ஆண்டுகளில், கவின் தனது கொழும்பு வீட்டில் 2021 ஆம் ஆண்டும் மற்றும் 2022 இன் முதல் 10 மாதங்கள் மட்டுமே வசித்தான். நவம்பர் 2022 இல், இரத்தினபுரியில் கட்டிடமொன்றுக்கு மாறாக தனது கொழும்பு நிலம் மற்றும் வீட்டை மாற்ற பரிவர்த்தனை உறுதி ஒன்றை (Deed of Exchange) எழுதினான். 2022 இல் இரத்தினபுரி கட்டிடத்தின் நியாயமான சந்தை மதிப்பு ரூ. 40,000,000/- ஆகும்.

(i) இந்தச் சூழ்நிலையில் கவினின் வருமான வரிக் கடப்பாட்டினை ஆராய்க.

**(20 புள்ளிகள்)**

(ii) கவின் தனது மனைவியை ஏக வாரிசாக நியமித்து 2021 இல் இறந்துவிட்டான் எனக் கருதிக் கொண்டால், வருமான வரிக் கடப்பாடு எவ்வாறு வேறுபடும்?

**(5 புள்ளிகள்)**

3. பகுதி அ மற்றும் ஆ **இரண்டிற்கும்** விடையளிக்குக.

அ. பங்குடைமைகள் மற்றும் கம்பெனிகள் ஆகியன வணிகத்தில் ஈடுபடும் நபர்களின் வகைகளில் பொதுவான இரண்டு வடிவங்களாகும். 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறான) ஏற்பாடுகள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகளை ஆதாரமாகக் கொண்டு, குறிப்பிடப்பட்ட நபர்களின் வதிவிடம் எனும் கருத்தேற்பு (concept of residence) மற்றும் வரிக் கடப்பாடு தொடர்பில் ஆராய்க.

**(12.5 புள்ளிகள்)**

ஆ. வியாபார வருமானம் மற்றும் முதலீட்டு வருமானத்திற்கு இடையேயான வேறுபாட்டினை ஆராய்ந்து ஏன் 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தினுள் (திருத்தப்பட்டவாறான) முதலீட்டு வருமானத்துடனான வரிக்கடப்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதற்கான காரணங்களை நோக்காகக் கொண்டு விமர்சித்துப் பகுப்பாய்வு செய்க.

**(12.5 புள்ளிகள்)**

4. ராகம போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் டங்கன் சில்வா எனும் வைத்தியர் மாதாந்தம் ரூ. 700,000/- சம்பளம் பெறுகின்றார். அவர் மாதத்திற்கு ரூ. 60,000/- மதிப்புள்ள மருத்துவர்களின் தங்குமிடத்தைப் பயன்படுத்துவதோடு மாதத்திற்கு ரூ. 75,000/- மதிப்புள்ள எரிபொருள் கொடுப்பனவையும் பெறுகிறார். அவர் அரசாங்கத்தால் வழங்கப்படும் இரவு நேரங்களில் (night shifts) வேலை செய்வதற்கான ரூ. 300,000/- இனையும் மற்றும் அரசாங்கத்தினால் வழங்கப்படும் வாழ்க்கை செலவு கொடுப்பனவான ரூ. 20,000/- இனையும் பெறுகிறார். அவருக்கு முதுகலை பட்டப்படிப்புக்கான புலமைப்பரிசில் கிடைத்துள்ளதுடன் அதன் பெறுமதி 20 மில்லியன் ரூபாவாகும். மூன்று மாதங்களுக்கு முன்னர், அவர் தேசிய வைத்தியசாலையை விட்டு வெளியேறி ராகம வைத்தியசாலையில் சேர்ந்த போது, தேசிய வைத்தியசாலையின் ஊழியர்கள் இவரின் சேவையைப் பாராட்டி ரூ. 500,000/- பெறுமதியான பரிசை வழங்கினர். மேலும், தனது தந்தையால் நிறுவப்பட்ட சிட்டி ஹாஸ்பிடல் பிரைவேட் லிமிடெட் (City Hospital Pvt Ltd) இன் பணிப்பாளராக இருக்கும் வைத்தியர் டங்கன், தினமும் மாலை 5.00 மணிக்குப் பின்னர் அங்கு நோயாளிகளைப் பரிசோதிக்கிறார். அதற்காக அவர் மாதந்தோறும் ரூ. 1,500,000/- இனைப் பெறுகிறார். மேலும், அந்த மருத்துவமனையின் பணிப்பாளராக, இந்த ஆண்டிற்கான அதனது இலாபத்தில் ரூ. 3,000,000/- பெறுமதியான தனது பங்கினைப் பெறுகிறார். தனியார் மருத்துவமனைகளின் உற்பத்தித்திறனை கணிக்கும் போட்டியில் சிட்டி மருத்துவமனை வெற்றி பெற்றதோடு அம் முயற்சியில் ஈடுபட்ட வைத்தியர் டங்கன் தனிப்பட்ட முறையில் ரூ. 2,500,000/- பரிசைப் பெற்றார்.

2022/2023 மதிப்பீட்டாண்டிற்கான வைத்தியர் டங்கனின் வருமான வரி எவ்வாறு கணக்கிடப்பட வேண்டும் என்பதைப் பற்றி ஆராய்க.

**(25 புள்ளிகள்)**

5. பின்வருவன சிட்டி ஹாஸ்பிடல் பிரைவேட் லிமிடெட் என்பதன் 2022/2023 மதிப்பீட்டு ஆண்டிற்கான செலவுகளாகும். அதன்படி, பொருத்தமான நியதிச்சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகளை ஆதாரமாகக் கொண்டு சிட்டி ஹாஸ்பிடல் பிரைவேட் லிமிடெட்டின் வருமான வரியைக் கணிப்பிடுவதில் இச் செலவுகளின் ஏற்புடைமை தொடர்பில் ஆராய்க.

அ.) புதிய பணிப்பாளர் சபையை மருத்துவமனை ஊழியர்களுக்கு அறிமுகப்படுத்துவதற்காக டெம்பிள் ட்ரீஸ் ஹோட்டலில் நடைபெற்ற இரவு விருந்துக்கு ரூ. 1,500,000/-.

ஆ.) ஒரே சமயத்தில் ஐந்து குழந்தைகளின் மகப்பேற்றிற்காக (delivery of quintuplets) இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட மருத்துவக் குழுவிற்கு ரூ. 3,000,000/-.

இ.) மருத்துவமனைக்கு புதிதாக வாங்கிய சுவாசமுட்சிகளுக்கு (ventilators) ரூ. 2,000,000/- மற்றும் பழைய சுவாசமுட்சிகள் (ventilators) ஏலத்தில் ஏற்பட்ட நட்டத்திற்கு ரூ. 1,000,000/-.

ஈ.) ஆய்வகம் மற்றும் மருத்துவக் கூடத்தில் உள்ள குளிரூட்டும் இயந்திரங்களை பழுதுபார்ப்பதற்கு ரூ. 500,000/-.

உ.) வருடாந்த மருத்துவமனை உரிமத்தைப் புதுப்பிப்பதற்கு ரூ. 200,000/-.

ஊ.) மருந்தகத்திற்கு மருந்துக்களை வாங்குவதற்கும் புதிய கொரோனா வைரஸ் திரிபு பற்றிய ஆய்வக சோதனைகளுக்கும் ரூ. 3,000,000/-.

**(25 புள்ளிகள்)**

6. பகுதி அ மற்றும் ஆ **இரண்டிற்கும்** விடையளிக்குக.

அ. 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறான) ஏற்பாடுகளின் கீழ் உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியின் தீர்மானத்தில் (determination) அதிருப்தியடையும் வரிசெலுத்துநருக்கு நிவாரணம் வழங்குவதற்கான மேன்முறையீட்டு நடவடிக்கை முறை பற்றி விமர்சித்துப் பகுப்பாய்வு செய்க.

**(15 புள்ளிகள்)**

ஆ. "வரிசெலுத்துநரால் அளிக்கப்பட்ட விபரத்திரட்டின் அடிப்படையிலோ அல்லது வரி மதிப்பீட்டாளரால் அவருக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சுய வரிமதிப்பீட்டின் அடிப்படையிலோ, வரிமதிப்பீடு ஒன்று செய்யப்படுகையில் அவ்வாறான உத்தியோகபூர்வ வரிமதிப்பீட்டுச் செயலானது சரியாகவும் முறையாகவும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற மறுதலிக்கத்தக்க அனுமானம் எழுகின்றது. எனவே, அத்தகைய மதிப்பீட்டிற்கு எதிராக வரிசெலுத்துநரொருவர் மேன்முறையீடு செய்யும் போது, மதிப்பீட்டை மறுதலிக்கும் பொறுப்பு அவர் மீதே உள்ளதுடன், மேலும் மதிப்பீடு தவறானது மற்றும் மிகையானது என்று ஆணையாளர் தலைமையதிபதியை திருப்திப்படுத்த ஆரம்பிப்பது வரிசெலுத்துநரின் பொறுப்பாகும்."

Guillain v. CIT: CTC 361

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறான) ஏற்பாடுகள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகளை ஆதாரமாகக் கொண்டு மேற்கூறிய கூற்றினை ஆராய்க.

**(10 புள்ளிகள்)**

7. கேள்வி <u>**அ அல்லது ஆ**</u> விற்கு விடையளிக்குக.

அ. பொருளாதாரக் கண்ணோட்டத்தில், வருவாய் ஈட்டுவதனைக் குறைக்கின்றதொன்றான, வரித் தவிர்ப்பு (tax avoidance) மற்றும் வரி எய்ப்பு (tax evasion) ஆகியவை வரிச் சுமையைக் குறைக்கும் ஒரே விருப்பத்தை அடிப்படையாகக் கொண்டவையாகும். சட்ட வேறுபாடுகள் மற்றும் தார்மீகக் கரிசனைகள் காரணமாக இது, இன்னமும் தனிநபர்கள் தங்களை

வேறுபட்டவர்களாக அங்கீகரிப்பதாகவும் மற்றும் சமமற்றமுறையில் நியாயமானதாகவும் எதிர்பார்க்கப்படுகிறது. ஆராய்க.

**(25 புள்ளிகள்)**

ஆ. சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற சமூக சேவைகளுக்கும், மின்சாரம், சாலைகள் மற்றும் பிற பொது நன்மைகள் போன்ற முக்கியமான உட்கட்டமைப்புகளுக்கு நிதியளிக்கும் ஒரு நாட்டின் தகுதிக்கு வரி வசூலிப்பு மற்றும் அரசாங்க வரி வருவாயை வலுப்படுத்தும் திறன் ஆகியவை மையமாக உள்ளது. எனவே, வரி செலுத்துவோர் மீது கடுமையான பாதிப்புக்களை ஏற்படுத்தினாலும், செலுத்தத்தவறிய வரியை வசூலிக்க உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியிடம் வழங்கப்பட்டுள்ள பாரிய அதிகாரம் நியாயமானதாகும்.

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறான) ஏற்பாடுகள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகளை ஆதாரமாகக் கொண்டு மேற்கூறிய கூற்றை ஆராய்க.

**(25 புள்ளிகள்)**

**********